வல்வை

அமரர்

## உயர்திரு. அ. ஆனந்தசாமி

அவர்களின்



# நினைவு மலர்.

உ



BY Prof. ... PAN...

## நெடியகாடுறை விநாயகன் துதி.

நாடி வந்தோம் நெடியகாடுதனில் உறை
நம் முதல்வா! சிவன் உமை புதல்வா! அருள்
தேடி வந்தோம் ப்ரணவ நாயகனே! வல்வைத்
தாயவன் துதி செய்யும் தூயவனே!
பாடி வந்தோம் விக்னம் தவிர் பதியே — வன்னித்
தருநிழல் தனில் அமர் அருள் நிதியே
ஓடி வந்தோம் உயர் கணபதியே — நலம்
ஓங்கும் உன் இருபத மலர் துணையே.

## வல்வை முத்துமாரி அம்மன் துதி.

அல்லல் தனை அகற்றிடுவாள் அன்னை முத்துமாரி! – எங்கள்
ஆதிசக்தி ஆணிமுத்தைச் சூடும் அருள் வாரி!
தொல்லை வினை தீர்க்கத் தோணி ஏறி வந்த மாரி! – அன்னை
தொண்டு செய்ய ஓடிவரும் அன்பர் பல கோடி
வல்வைநகர் மாந்தர்க்கவள் என்றும் உபகாரி! – எங்கள்
இல்லம் தோறும் எழுந்தருளும் இனிய முத்துமாரி!
பல்லுயிரும் பல உலகும் படைத்த மகாதேவி! – இந்தப்
பாரில் வல்வை தேடி வந்த கோடி முத்துமாரி!

செங்கரும்பின் சாறெடுத்துச் செந்தேனைத் தான் கலந்து
செந்தமிழில் சொன்ன கவியன்ன முத்துமாரி!
பொங்கும் நிலாச் சுடருடனே பகலவனின் கதிர் தொடுத்து
மின்னொளியும் சேர்ந்தொளிரும் தேவி முத்துமாரி!
குங்குமத்தின் செம்மையுடன் குளிர் சாந்தும் நீறும் மஞ்சள்
கோலமிடும் கோதையவள் எங்கள் முத்துமாரி! – அன்னை
தங்கவிழா கண்டவர்கள் தரணிதனில் இந்த்ரலோகம்
இங்கு வந்ததென்ன வைத்த வல்வை முத்துமாரி!

## வல்லை வைத்தீஸ்வரர் துதி.


வருவிருந்தோம்பிடும் வல்வை நகர் தனில் நின்று
வல்வினை தீர்க்கும் வைத்தீஸ்வரனே!
அருமறை ஓதிடும் அடியவர் பிணி உந்தன்
அடிமலர் அணைந்திட அகலுமய்யா!
கருவினில் தோன்றிய நாள் முதல் எம்மை ஈன்ற
தாயினும் பரிந்தெம்மைக் காப்பவனே!
இருள் மலம் அகற்றிடும் ஆரமுதே! தேனே
இனிய நல் வரம் தர வாரும் ஐயா!

## செல்வச் சன்னதி முருகன் துதி.

தென்பொதிகை தவழ்ந்து வந்த தென்றலே நீ அன்று
தென்னிலங்கை தேடி வந்த விந்தை தனைச் சொல்லு
வன்ன மயில் வாகனமும் வேலும் செந்தூர் நீங்கி
தொண்டைமானாறு ஆற்றங்கரை கோயில் கொள்ள நாடி
சன்னதியில் வந்தமர சிரித்த முகம் ஆறு
அன்றுமுதல் அருள் சொரியும் அற்புதத்தைக் கூறு
முன்னை வினை தீரக் கந்தன் கழல் பணிந்து பூசி
உனக்கருளும் கோடிவரம் சன்னதியான் நீறு!

**வல்லைக் கலா பெரியதம்பி**
பாடிய பாமலர்கள்.

# உயர்திரு. அ. ஆனந்தசாமி



உதயம்:
14-04-1914

மறைவு:
17-03-1983

## மறைந்த அண்ணல்
# திரு. அ. ஆனந்தசாமியின்
## நினைவு பற்றிய
# இரங்கற் பாக்கள்.

### காப்பு

அருமறை முதற்பொருள் அரன் உமைதரு சுதன்
திருச்சிற்றம்பல கணபதி எனும் நாமத்தன்
தருதனில் உயர் வன்னி தழுவு நெடியகாடு
தனில் உறை வல்லை விநாயகன் அடிபோற்றி.

### உதயம்

அம்புவியில் தென்னிலங்கை வடகரையின் தனிச் சுடராய்
வல்லையம் பதியில் வாழ்ந்தாய்
அரியகுல நலம் நிறைந்த அருணாசலம் மகிழ
அன்று நீ வந்துதித்தாய்
செம்பவள இதழ்மாரி பதம்பணியும் பத்தினியாய்
சீர் திகழும் மாண்புடையளாய்
பிறந்த தாய் தங்கம்மா சீராட்டித் தாலாட்ட
சற்புத்திரனாய் மிளிர்ந்தாய்.

### இளமை

ஆனந்தசாமி எனும் நாமமது தான் பரவ
வளர் பிறையாம் நீ வளர்ந்தாய்
அன்பான சோதரர்க்கு அன்பெனும் வாரிதியாய்
அண்ணனாய் அரவணைத்தாய்
மானமது உயிராக நீ கொண்டு அறம் வரை
அயராது பாடுபட்டாய்
மனுதர்மம் தவறாது மாறாத வீரமொடு
மங்காத செல்வன் ஆனாய்.

பொங்குவகை கொண்ட உன் பெற்றோர்க்கு உன் பின்னோ
ரத்தினசபாபதி தோன்றினான்
உங்கள் பின் உயிரான பாலசுப்பிரமணியமோ
உனக்கு முன் அமரன் ஆனான்
அங்கவன் பின் சென்றான் தம்பி நற்துரைராசா
நால்வரின் பின் தோன்றலான
தங்கமாம் சீலம் நிறை இளையவன் முருகேசு மேல்
தனியன்பு கொண்டு அணைத்தாய்.

மலையன்ன தோள்களும் மாலையைய வண்ணமும்
மாரனை ஒத்த அழகும்
சிலையன்ன மேனியும் சிரிக்கின்ற விழிகளும்
செந்தேனை ஒத்த மொழியும்
நிலையான பாசமும் நிறைவான நேசமும்
நெஞ்சார்க் கொள்ளும் நட்பும்
கலை பலவும் கண்டு நீ காலத்தின் ஓட்டத்தில்
கட்டிளம் காளை ஆனாய்.

## இல்லறம்

கண்ணை இமை காப்பது போல் காத்த நின் பெற்றோர்கள்
களித்திடவே அன்று ஒரு நாள்
பெண்ணில் நல்லாள் ஆன பரிபூரணம் தன்னை
பார் புகழ நீ மணந்தாய்
வெண்முத்து தனைக் கடலில் தேடி எடுத்தாற் போல்
வடிவழகி உனக்கு வாய்த்தாள்
பண் சொரியும் வீணையும் நாதமும் போல இணை
பிரியா இல்லறம் நீ காத்தாய்.

பிள்ளைக் கலிதீர்க்க அரும் ஸ்ரீதரன் தோன்றினான்
உன் பிரதி பிம்பம் ஆனான்
சாரதாதேவி தனைக் கைப்பிடித்துத் துஷ்யந்தன்
ஜனனிக்குத் தந்தை ஆனான்
உள்ளங்கவர் ஜெயதேவி உன் செல்வி ஸ்ரீராம் மனைவி
ரமேஷ், பிரதீப், பாரத்தின் தாய்
உயிர்ச் செல்வி ரமாதேவி, சந்திரநாதன் துணைவி
அகிலா பின் திலீபனின் தாய்.

பின் உதித்த முழுமதியாம் கலாதேவி உந்தனுக்கு
முன் வானில் சென்று மறைந்தாள்
தன் நிகரிலா மனோகரன் வனஜாதேவி தனை
தானடைந்து பார்த்திபனையும்
மின்னொளிரும் சந்திரிகாவையும் தந்தான் அவன் பின்னே
இனிய சுதாதேவி உதித்தாள்
இன் மலராய் சிவப்பிரகாசம் மனைவியாகிப் பிரசாத்,
வித்யா எனும் இருவர் ஈன்றாள்.

செல்விகளில் சிறியவள் சீர்மிகு உஷாதேவி
சாந்தகுமார் தனை மணந்து
நல்ல இளம் நர்மதா மாதங்கி எனும் மலர்கள்
இருவரையும் ஈன்று மகிழ்ந்தாள்
செல்வ மகன் அருணபரன் புஷ்பலதாவின் துணைவன்
அவன் பின்னே வந்து உதித்தான்
எல்லோர்க்கும் இளையவன் இனியவன் அரியவன்
ஈஸ்வரன் உன் கண்ணின் மணியாம்.

இளையவனுக்கிரங்கி ஸ்ரீவதனியை விரும்பிநீ
முன் நின்று சேர்த்து வைத்தாய்
விளைந்த இன் அமுதான பவித்ரா உயிர்ப் பேத்தி
உந்தனுடன் இறுதியாக
விளையாடினள். அந்த இன்பத்தில் மூழ்கி நீ
இன் துயிலில் ஆழ்ந்து விடவே
விளையாடினான் காலன். மோசம் செய்தான் அந்தோ!
விதியையே முடித்து விட்டான்.

ஊறு

அடுத்த நாள் விடிந்தது. அம்புவியும் விழித்தது
அந்தோ நீ விழிக்கவில்லை!
படுத்தவர் எழுவரோ என்றேங்கி அழுதனர்
ஏனோ நீ கேட்கவில்லை!
திடுக்கிட்டார் மைத்துனர் திகைப்பூண்டை மிதித்தாற்போல்
தாளாத துயரம் கொண்டார்
கெடுத்தானே பாவி என்றுவி சோர்ந்தே துணைவி
துடிதுடித்துன் மேல் வீழ்ந்தாள்.

ஆண்டாண்டு தோறும் இனி அழுதாலும் என்ன பயன்?
அன்பொழுகும் உன் முகத்தை நாம்
மீண்டும் இனிக் காண்போமோ இன்மொழியைக் கேட்போமோ
உன் உறவை யாம் பெறுவமோ?
ஆண்டவன் தந்த உனை, அவனே எடுத்து விட்டான்
அவன் கணக்கை யார் அறிவார்?
மாண்டு விட்டாய் ஐயா நீ, மாளாத துயரமதில்
அனைவரையும் ஆழ்த்தி விட்டாய்!

எல்லோர்க்கும் உன் கடமை செய்திட்டாய் என்றோ நீ
எமை ஏங்க விட்டுச் சென்றாய்?
எவர் தான் இருந்தாலும் உன் மனையில் உன் இடத்தை
யாரே நிரப்ப வல்லார்?
நல்லோன் நீ, உலகிற்கு நல்ல சந்ததி தனைத் தந்து
நன்றாக வாழ வைத்தாய்
சொல்லார் எவரும் குறை, நிறையையே அகங் குளிர
சொல்லுவார் திண்ணம் ஐயா!

காலங்கள் மாறிடினும் கருத்துக்கள் மாறிடினும்
மாறாது உந்தன் நினைவு!
ஞாலமது உள்ள வரை 'சாமி' என்னும் செல்லப்பேர்
நல்லன்பர் நினைவில் நிலைக்கும்
காலமெனும் மேடையிலே நம் பாகம் ஓய்ந்த பின்
நீ சென்ற உலகு நாடி
சீலன் உனைத் தேடி வர. சந்திக்க நீ வருவாய்
அன்று வரை காத்திருப்போம்.

**வல்லைக் கமலா பெரியதம்பி**
ஆக்கியவை.
30-3 83

உ

அமரர்

# அ. ஆனந்தசாமி அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

வல்வெட்டித்துறையில் தீருவில் தெருவில் ஒரு அன்பில்லம் அதில் அன்பால் இணைந்த தம்பதியர் அருணசலம், தங்கம்மா என்னும் இருவரும் இனிது வாழ்ந்தனர் எல்லாச் செல்வமும் இருந்தும் என்ன? இல்லாதது பெறுதற்கரிய பிள்ளைச் செல்வம் எனவே ஆலயம் தோறும் சென்றனர். அரிய விரதம் பல நோற்றனர் இறைவன் அன்பர்க்கு அருளத் திருவுளம் கொண்டான் மூன்றும் ஆண்டு நிறைந்தது ஆனந்த வருஷம் பிறந்த அன்றே அருமருந்தன்ன செல்வன் பிறந்தான். ஆனந்த ஆண்டில் உதித்து, ஆனந்த வாரியில் ஆழ்த்திய செல்வனுக்கு. ஆனந்தராசா என்று பொருத்தமாகப் பெயரிட்டனர். ஆனல் செல்லமாகக் கூப்பிட்ட 'ஆனந்தசாமி' என்னும் பெயரே நின்று நிலைத்தது.

தொடர்ந்து ரத்தினசபாபதி, பாலசுப்பிரமணியம், துரைராசா. முருகேசு என நான்கு அரிய சோதரர் தோன்றினர் தம்பியர் நால்வர் தந்த இறைவன். ஒரு தங்கையைத் தாவில்லையே என்ற குறை இறுதி வரை தீரவில்லை.

வளர்மதி போல் வளர்ந்தார். ஏனோ கல்வியில் அதிக நாட்டம் செல்லவில்லை பதின்மூன்றும் வயதிலேயே தொழில் பால் ஆர்வம் பிறந்தது. எனவே படிப்பைத் துறந்தார். இவரது தாய் மாமன்மார் இருவர். ஒருவர் நடராசா, மற்றவர் தங்கவேலாயுதம் பின்னவரிடமே தமது 14ம் வயதில் தொழில் கற்கச் சென்றுர். அவ் வயதிலேயே கார் ஓட்டுவதில் சிறந்த வித்தகரானுர். பல தொழில் நுட்பங்களும் இவருக்குக் கைவந்த கலையாயின. 20ம் வயதில் மாமனுரிடமிருந்து விலகி தனியாகவே தொழில் செய்யத் துணிந்தார். தம்பி ரத்தினசபாபதியும் இவருடன் கூட்டாளியானுர். இந் நாளில் இவர் வாழ்வில் வசந்தம் புகுந்தது நண்பர் தங்கவேலுவுடன் ஒரு நாள் சென்ற காலை, அவரது தங்கை

பரிபூரணத்தைச் சந்தித்தார். இவர் வடிவேலு தம்பதியரின் இளைய செல்வி. தாம் விரும்பிய நங்கையையே மணக்க விழைந்தார். 1939ம் ஆண்டு திருவருள் கூட்டத் திருமணம் கைகூடியது அன்று மலர்ந்த இனிய மணவாழ்வு இறுதி வரை மலரோடு சேர்ந்த மணமாகவே நிறைந்து விளங்கியது. போற்றும்படி இனிய இல்லறம் காத்தார். கைக்கிளைய அன்புத் தம்பி முருகேசுவை அன்போடு அரவணைத்து படிப்பித்து ஆளாக்கினார்

காலம் செல்லச் செல்ல, இவரது கார் மோகம் வளர்ந்தது. அதனால் ஒன்றிரண்டு எனக் கார்கள் பல வாங்கி அவற்றைச் செலுத்துவதே இவரது சிறந்த பொழுதுபோக்காயிற்று. புதிய கார்களில் என்றுமே பெரிய நாட்டம். அதன் காரணமாக அடிக்கடி கார்களை மாற்றிக் கொண்டார். கண்ணைக் கவரும் புத்தம் புதிய கார்களை வாங்கி கலை நயத்துடன் காற்றெனக் கூடிய வேகத்தில் செலுத்துவதில் ஒரு தனி இன்பம் கண்டார். இதனால் 70 திற்கு மேற்பட்ட கார்கள் இவர் கரம்பட்டுக் கைமாறின. அதனால் 'கார்க் கராச் சாமி' என்னும் பட்டமும் பெற்றார்.

கார்த் தொழிலில் ஒரு மேதாவியாக விளங்கி அரிய ஒரு சாதனை ஆற்றிய அவர், வணிகத்திலும் தலை சிறந்து விளங்கினார். 1944ம் ஆண்டில் தம்பி பாலசுப்பிரமணியமும், 1957ம் ஆண்டில் வல்வையின் சரித்திரத்தில் தொழில் சாதனை புரிந்த, தம்பி துரைராசாவுடனும் கூட்டுச் சேர, இவரது வணிகம் மென்மேலும் ஓங்கியது. இப் பஞ்சபாண்டவருடன், அவரது நல்ல நண்பர் பலரும் சேர்ந்து, இல் வல்வை நகரில் செய்த கூட்டு வணிகத்தின் புகழ், 20 ஆண்டு வரை கொடிகட்டிப் பறந்தது. தம் தனித்த முயற்சியாக "ஈஸ்வரன் டிரான்ஸ்போட்" என லொறிகளை வைத்து ஒரு புதிய துறையில் வெற்றி கண்டார்.

ஊடும் பாவும் போல வரும் இன்ப துன்பம் இவரையும் விட்டு வைக்கவில்லை உயிர் தந்த தந்தை 1956ம் ஆண்டில் மறைந்தார். பின் 1969ம் ஆண்டு திறமை மிக்க இணைபிரியாத் தம்பி பாலசுப்பிரமணியத்தை இழந்தார். 1971ம் ஆண்டில் அன்னையைப் பறித்துச் சென்ற காலன், சற்றும் கருணையின்றி தொழில் திறனும் வைர நெஞ்சமும்' வல்லமையில் மிக்க உயிர்த் தம்பி துரைராசாவையும் 1975ம் ஆண்டில் பலி கொண்டான். சிறகொடிந்த பறவையென தம்பியர் பிரிவால் துடித்தார். எனினும் மனம் தளராது தமது 65-வது வயது வரை தொழில் சாதனை பல திறம்படச் செய்தார்.

இவரது இல்லறப் பூங்காவில், செல்வச் சன்னதியானை பல நாள் மன்றுடிக் கேட்டு, அவன் அருளிய முதல் மலர், மாண்பில் உயர்ந்த செல்வன் ஸ்ரீதரன். அப்பாவை உரித்து வைத்தாற் போன்ற ஸ்ரீதரனுக்கு, அவன் நேசித்த S. V. நடராஜா தம்பதிகளின் அரிய செல்வி சாரதாவை மணம் செய்வித்து மகிழ்ந்தார். அடுத்துப் பிறந்த குல விளக்கான ஜெயதேவியை R. நாகமுத்து தம்பதியரின் அருமை மகனான குணக்குன்றும் ஸ்ரீராமுக்கு திருமணம் செய்வித்தார். இரண்டாம் திருச்செல்வியாம் ரமாதேவியை நல்லதம்பி தம்பதியர் ஈன்ற தவப்புதல்வன் சந்திரநாதனைக் கைப்பிடிக்கச் செய்தார். ஆனால் மகாலட்சுமியே அவதரித்தாற் போல் வீட்டில் வளையவந்து, பெற்றோரையும் மற்றோரையும் மகிழ்வித்த மூன்றாம் செல்வி கலாதேவியை, காலன் கவர்ந்து சென்றான். அப் பேரிழப்பால் தன் ஆவி சோர்ந்து தந்தை அடைந்த துன்பம் வெறும் சொல்லில் அடங்காது.

பின் ஒருவாறு மனம் தேறினார். நாலாவது செல்வப் புதல்வியான இன்கனியாம் சுதாதேவியை, தம் உறவினராம் முதலியார் பசுபதி தம்பதிகளின் மகனான சிறந்த குணசீலனும் சிவப்பிரகாசத்திற்கு மணமுடித்து வைத்தார். இரண்டாம் செல்வன் பண்பில் உயர் மனோகரனுக்கு, அவன் வரித்த மாமன் மகளும், பொன்னம்பலம் தம்பதிகளின் அருட்புதல்வியுமான, வனஜாவை மனமுவந்து சேர்த்து வைத்தார். அதற்கு முன் தன் ஆருயிர்ச் செல்வி உஷாதேவியை முத்துத்தம்பி தம்பதியரின் மகன் உத்தம சீலனும் சாந்தகுமாருக்கு மாங்கல்ய தாரணம் செய்வித்து மகிழ்ந்தார். கடைக்குட்டியான அருந்தவப் புதல்வன் ஈஸ்வரன் காதலித்த, க. த. பெரியதம்பி தம்பதிகளின் சீர்வளர்ச் செல்வியாம் ஸ்ரீவதனியை தாமே முன்னின்று மணவினை முடித்து வைத்தார். அன்பு மனைவியின் விருப்பறிந்து, அவர் தம் உறவிற்குள் பெண்ணெடுக்க விரும்பி, தன் அருமருந்தன்ன புதல்வன் அருணபரணுக்கு, திருநாவுக்கரசு தம்பதியின் ஆருயிர் ஏக புதல்வி புஷ்பலதாவை திருமணம் செய்வித்தார்.

அருமைத் தம்பியரின் மனைவியராம் காலஞ்சென்ற காமாட்சியம்மா, வாலாம்பிகை, ராஜேஸ்வரி, யோகேஸ்வரி ஆகியோர், இவர் வாக்கை வேத வாக்காக மதித்தனர். மனைவியுடன் பிறந்த மைத்துனர்கள் ரத்தினவேல், தங்கவேல், ராஜவேல் மற்றும் மைத்துனியர் சம்பூரணம், ஆத்தாள்பிள்ளை, ராசநாயகம்,

யோகநாயகி, ஞானசகுந்தலா ஆகியோரின் அன்புக்குரியவராய் இலங்கினர். உற்றார், உறவினர் அனைவருக்குமே ஒரு கலங்கரை விளக்கமெனத் திகழ்ந்தார். தான் பெற்ற நவமணிகட்கு நல நிதிகளையும் வழங்கி நல்வாழ்வு வாழ வழிகாட்டினர். அணையுமுன் ஜோதி சுடர் விட்டொளிர்ந்தாற்போல, மறையுமுன் பல மங்கலச் செய்கைகளைச் செய்து மகிழ்வெய்தினர். தம்பி மகன் சுதர்சனின் திருமண வைபவத்தைத் தாமே தலைமை தாங்கி நடத்தி வைத்தார் ஏனைய பெருமக்கட்கும் அவர் முன்னின்று விவாகம் நடாத்த அவர்கட்குக் கொடுத்து வைக்கவில்லை.

கால் நூற்றண்டு வரை அவரைப் பீடித்த நோய் அவரிடம் தோற்றது. புன்னகையோடு காலனின் கரம்பற்றி கனவைம் வாழ்வின் முடிவெய்தினர். 17—3—83 அன்று, பொழுது புலர்ந்தன்ன! அவர் தான் மீளாத துயிலில் ஆழ்ந்து விட்டாரே! இறையடி நீழலில் இணைந்து விட்டார். அந்நாள் வரை. மாநிலத்தில் எவர்க்கும், எதற்கும் அஞ்சாத மன்னன் போல் வாழ்ந்தார் மலர்ந்த முகம், மாசற்ற உள்ளம், காந்த விழிகள், கம்பீர நடை சற்று முன் கோபம் வந்தாலும் பின் இரக்கம் அதைச் சமன்செய்யும். அகன்ற நெற்றி, அறிவின் ஆழத்தைக் காட்டும். ஆணித்தரமான பேச்சு அனைவர்க்கும் உவகை ஊட்டும். பண்பும் பரிவும் பாசமுள்ளோர் நெஞ்சை அள்ளும். அன்புடன் கூறும் அறிவுரைகள் உற்றார் உள்ளம் கொள்ளை கொள்ளும், தீர்க்கதரிசி, சிறந்த வேதாந்தி, தீவிர சமயவாதி.

சன்னதிச் செல்வனின் ஈடில்லா பக்தர். அரை நூற்றண்டு காலமாக சுக்கிர வாரம் தோறும் அச் சிங்காரவேலனை சேவிக்கத் தவறவில்லை. நெடியகாட்டுப் பிள்ளையார் கோவிலில் மகள் கலாவின் நினைவு கண்கவர் திரையோவியமாகத் திகழ்கிறது விநாயகருக்கு அழகிய மயில் வாகனமும் அர்ப்பணம் செய்தார் வல்வை வைத்தீஸ்வரர் ஆலயத்தில் இவரது உபயமாக ராஜராஜேஸ்வரி அம்மனுக்கு எழுந்தருளி ஸ்தூபி இலங்குகிறது இது போன்ற இவர் சமயத் தொண்டுகள் பற்பல. அவர் வழிபட்ட தெய்வம் அவர்க்கு இறுதியில் வழித் துணையாகியது.

பங்குனித் திங்கள் பதினெரும் நாள். என்றும் போல காலமலரில் ஒரு இதழ் விரிந்தது காலையும் மாலையும் எம்பெருமானின் ஆலயம் சென்றார். அவன் திருவிழாக்கோலம் கண்டார் பேரின்பம் கொண்டார். வீட்டில் பேரக்குழந்தையுடன் கொஞ்சி மகிழ்ந்தார்.

பேரப்பிள்ளைகளில் அவருக்கு கொள்ளை ஆசை. அன்பு மனைவி
யுடன் அமுதுண்டார். அவர் கரம் பற்றிய காலம் முதல் அவரது
பண்பில் உயர் மனையாள், அவர் கண்கலங்க விட்டதில்லை. மன்ன
னின் கொடி நிழலில் போரரசியெனப் பெருவாழ்வு வாழவைத்தார்.
அன்று முழுவதும் அவர் தம் நெஞ்சில் ஒரு நிறைவு. முகத்தில்
ஒரு தனி ஒளி. இரவு திருமுருக கிருபானந்தவாரியாரின் சொன்
மாரி அவரை அருள் வெள்ளத்தில் ஆழ்த்தியது. இறுதியாக அவர்
எம்பெருமான் முன்றலில் சிரமேல் கரங்கூப்பி நின்ற கோலம்
கண்டவர், நெஞ்சு சிலிர்த்தது. எம்பெருமான் கரம் நீட்டி அழைத்
தானோ! அவனைத் தான். கடைசி மகன் தந்த அவரது உயிர்ப்
பேத்தியின் இன்முகத்தில் கண்டாரோ! உடன் பிரியா பிள்ளைக்
கனியமுதுடன், நள்ளிரவு வரை தாமும் குழந்தையாகி விளையாடி
னார் அவ்வின்பத்தால் நெஞ்செல்லாம் இனிக்க, இன் துயிலில்
ஆழ்ந்தார் இனிய புன்னகை தவழ. புனிதனின் கரம்பற்றி
பூவுலக வாழ்வை நீத்தார். இது "கந்தன் கருணை" கேட்டதன்
விளைவோ!

இனி நிலைக்கப் போவது அவரது நீங்காத நினைவு. அடுத்
தவர்க்கு நிழல் தந்த ஆலவிருட்சம் அவர். உறவினருக்கு நிறை
வளித்த நேசர் அவர் அன்பு மனைவிக்கு ஆருயிர்த் துணைவர்
அன்புத் தம்பிமார்க்கு நல்ல ஒரு வழிகாட்டி. பண்பான புத்தி
ரர்க்கு பாசமுள்ள தந்தை பெயர் சொல்லும் பேரர்க்கு பேரன்
பின் உறையுள் ஊரார் மெச்சும் வணிகவித்தகர். உண்மைக்கும்
உழைப்பிற்கும் இலக்கணம் கடமைக்கும் கண்ணியத்திற்கும் எடுத்
துக்காட்டு அடக்கமே உருவான அருஞ் செல்வர்.

அவர் பெயர், காலத்தால் அழியாது! அன்பு, என்றும்
அன்பர் நெஞ்சினின்று நீங்காது அவர் தந்த சந்ததியின் புகழ்
அவர் ஆசியால் என்றென்றும் மங்காது தோன்றிய ஆண்டு
ஆனந்த மயமானது மறைந்த ஆண்டோ தேவ துந்துபி துந்துபி
முழங்க வானவர் நாடு கண்ட வள்ளல். அண்ணல், அமரர்.
ஆனந்தர்! அவரது மனைவி மக்களின் அன்புத் தெய்வம்! அன்று
ரின் ஆத்மா சாந்தி அடைவதாக! ஆசிகள் நேசரை வாழ
வைப்பதாக!

ஓம் சாந்தி!

இங்ஙனம்

மனைவி, மக்கள்,

மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உ

# நன்றி நவிலல்.

வணக்கம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் திடீர் மறைவால் ஆராத் துயரில் ஆழ்ந்து நின்றோம். அன்று எம் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் தரத் திரண்டு வந்த அன்பர்கள் யாவருக்கும் எம் சிரம் தாழ்ந்த நன்றி.

தவிர, நாம் கேளாமலே முன் வந்து, அந்திமக் கிரியைகளையும், அந்தியஷ்டியையும் குறைவற நிறைவேற்ற உதவிய உறவினர் நண்பர் ஆகிய அனைவருக்கும் அகம் கனிந்த நன்றி.

அனுதாபச் செய்திகளை அனுப்பியும், அரிய மலர் வளையங்களை வழங்கியும் கௌரவித்துச் சிறப்பித்த எல்லாருக்கும் எம் மனமார்ந்த நன்றி.

அருட்பாக்களையும், இரங்கற்பாக்களையும் இயற்றிச் சிறப்பாக நம் நினைவு மலரை ஆக்க உதவிய கமலா பெரியதம்பி அவர்களுக்கும் எம் இதயம் கனிந்த நன்றி.

எல்லோருக்கும் தனிப்பட நன்றி கூற இயலாமையால் எம்மை மனமார மன்னிக்குமாறு அனைவரையும் வேண்டுகிறோம். நன்றி.

இங்ஙனம்
மனோஹரி, ரங்கனி,
நேருரங்கனி.

குமரன் அச்சகம் — பருத்தித்துறை.

## வம்ச

அருணசல

ஆனந்தசாமி
பரிபூரணம்
வடிவேல்–தங்கப்பொன்னு
மகள்

ரத்தினசபாபதி
காமாட்சியம்மா

பாலச
வா

ஸ்ரீதரன்
சாரதாதேவி
↓
துஷ்யந்தன்
ஜனனி

ஜெயதேவி
ஸ்ரீராம்
↓
ரமேஸ்
பிரதீபன்
பாரத்

ரமாதேவி
சந்திரநாதன்
↓
அகிலா
திலீபன்

கலாதேவி
(காலம் சென்ற)

மனோக
வனஜ
↓
பார்த்தி
சந்திரி

# வம்சா வழி.

அருணாசலம் – தங்கம்மா

- ...பதி / ...மா
- பாலசுப்பிரமணியம் / வாலாம்பிகை
- துரைராசா / ராஜேஸ்வரி
- முருகேசு / யோகேஸ்வரி

- கலாதேவி (...காலம் சென்ற)
- மனோகரன் / வனஜா
  - பார்த்திபன் / சந்திரிகா
- சுதாதேவி / சிவப்பிரகாசம்
  - பிரசாத் / வித்யகலா
- உஷாதேவி / சாந்தகுமார்
  - நர்மதா / மாதங்கி
- அருணபரன் / புஷ்பலதா
- ஈஸ்வரன் / ஸ்ரீவதனி
  - பவித்ரா